# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:159 **தேதி**:-30.03.2017

**மத்திய சங்க செய்திகள்**

அன்பார்ந்த தோழர்களே,

**நிறுவனங்களின் இணைப்பால் வேலை இழப்பு:-** மற்ற நிறுவனங்களை கபளிகரம் செய்யும் ஜியோவின் விலைக் குறைப்பின் காரணமாக பல தனியார் தொலை தொடர்பு நிறுவனங்கள் இணைய உள்ளன. வோடோபோன் நிறுவனம் ஐடியா செல்லுலாருடனும், ஏர்செல் நிறுவனம் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸுடனும் இணைய உள்ளன. மேலும் இணைப்புகள் நடைபெற உள்ளன. இந்த இணைப்புகளின் காரணமாக தொழிலாளர்கள் வேலை இழக்கப் போவதும் உண்மை. உதாரணமாக வோடோபோன் - ஐடியா இணைப்பின் காரணமாக 10,000 முதல் 25,000 தொழிலாளர்கள் வேலை இழப்பார்கள் என பத்திரிக்கை செய்திகள் தெரிவிக்கின்றன. மறைமுகமாக பணியில் இருந்த ஊழியர்களையும் கணக்கில் சேர்த்தால் சுமார் ஒரு லட்சம் வேலை இழப்புகள் ஏற்படும். மேலும் இணைப்புகள் நடைபெற இருப்பதால் மேலும் தொழிலாளர்கள் வேலை இழக்க உள்ளனர். உலகளாவிய அளவில் இத்தகைய இணைப்புகளும், கைமாறுதல்கள் காரணமாக பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கின்றனர். பெரு முதலாளிகளின் நலன்களை காப்பாற்றவே இத்தகைய இணைப்புகள் நடைபெறுகின்றன. எனினும் தங்களின் வாழ்வாதாரத்தை இழக்கும் லட்சக்கணக்கானோர்களை பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. முதலாளித்துவத்தின் கோர முகங்களில் இதுவும் ஒன்று.

**கவன ஈர்ப்பு தினத்தை சக்தியாக நடத்திடுவோம்**:- 01.01.2017 முதல் நடைபெற உள்ள ஊதிய மாற்றத்திற்காக பெரும்பான்மையான ஊழியர் மற்றும் அதிகாரி சங்கங்களின் முதல் இணைந்த இயக்கம் தான் 05.04.2017 அன்று நடைபெற உள்ள கவன ஈர்ப்பு தினம். அன்றைய தினம் அனைத்து தொழிலாளர்களும், அதிகாரிகளும் கோரிக்கை அட்டை அணிய வேண்டும். சக்தி வாய்ந்த வாயிற் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். கிளை/ மாவட்ட செயலாளர்கள் மற்ற சங்கங்களுடன் இணைந்து இதற்கான தயாரிப்பு பணிகளை சிறப்பாக செய்திட வேண்டும். அரசாங்கத்திற்கு சரியான தகவலை அனுப்பிடுவோம்.

**அதிகமாக வழங்கப்பட்ட பணம்**:-- ஊழியர்களுக்கு கடந்த காலத்தில் அதிகமாக வழங்கப்பட்ட பணத்தை திரும்ப பிடிக்கக் கூடாது என்கிற பிரச்சனையை தீர்வு காண்பதற்கு கார்ப்பரேட் அலுவலகம் ஏற்றுக் கொண்டது. இதற்காக மாநில நிர்வாகங்களிடம் இருந்து இதுவரை எந்த ஒரு பதிலும் வரவில்லை. எனவே தங்களின் மாவட்டங்களில் உள்ள இது போன்ற பிரச்சனைகள் உள்ளவர்களிடம் இருந்து மாவட்ட செயலாளர்கள், ஒரு முறையீட்டைப்பெற்று உடனடியாக மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக அனுப்பி விட்டு அதன் ஒரு நகலை மாநில சங்கத்தின் மூலமாக மத்திய சங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

**ராஜ பாஷா அதிகாரி தேர்வினை உடனடியாக நடத்திடுக**:- ராஜ்பாஷா அதிகாரிக்கான இலாகா தேர்வு 02.12.2012 அன்று கடைசியாக நடைபெற்றது. இந்த ஐந்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள காலி பணியிடங்களையும் கணக்கில் கொண்டு இந்த தேர்வினை உடனடியாக நடத்த வேண்டும் என நமது மத்திய சங்கம் மனித வள இயக்குனருக்கு கடிதம் எழுதியுள்ளது.

**BSNL கார்ப்பரேட் அலுவலகத்தின் மதிப்பு 2,300 கோடி ரூபாய்கள்:-** 2017 மார்ச் 18ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் BSNLன் சொத்துக்களை தற்போதைய சந்தை மதிப்பீட்டின் படி கணக்கெடுக்க ஊழியர்களும், அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டும் என CMD கேட்டு

கொண்டார். கணக்கீட்டு முறையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக இவ்வாறு சரியான மதிப்பீட்டை செய்தோம் என்றால் BSNLன் செல்வாக்கு பல மடங்கு உயரும். ஜூன் 30ஆம் தேதிக்குள் இந்த பணியினை முடிக்க வேண்டும். முதல் கட்டமாக புதுடெல்லி ஜன்பத்தில் உள்ள BSNL கார்ப்பரேட் அலுவலகத்தின் மதிப்பை ஒரு வார காலத்தில் மதிப்பீடு செய்ய வேண்டும் என CMD அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இவ்வாறு செய்யப்பட்ட கார்ப்பரேட் அலுவலகத்தின் மதிப்பு 2,300 கோடி ரூபாய்கள். இது மிகவும் உற்சாகம் தரக்கூடிய செய்தி. இதே போன்று நாடு முழுவதும் உள்ள ஒட்டு மொத்த மதிப்பு பிரமிக்கத்தக்க வகையில் இருக்கும். இந்த மதிப்பீடு செய்யும் பணியில் நாமும் பங்கேற்போம்.

**இல்லாத கேடர்களின் பெயர்களை நீக்கிடுக:-** நான்கு முக்கிய கேடர்களான RM, TM, Sr.TOA மற்றும் TTA கேடர்களின் பெயர் மாற்றம் நிகழ்ந்த பின்னரும், இன்னமும் பல மாநிலங்களில் ERP திட்டத்தில் அவை சேர்க்கப்படவில்லை எனவும் அதனால் பல குழப்பங்கள் ஏற்படுவதாகவும் ஊழியர் தரப்பில் சுட்டிக் காட்டப்பட்டது. இந்த பணியினை உடனடியாக செய்து முடிக்க மாநில தலைமை பொதுமேலாளர்களுக்கு கார்ப்பரேட் அலுவலகம் உத்தரவிட்டுள்ளது. மாவட்ட செயலாளர்கள் இதில் தலையிட்டு மாநில சங்கத்திற்கு தகவல் தர வேண்டுகிறோம்.

**JTO LICEதேர்வு முடிவுகளை உடனடியாக வெளியிடுக:-** 11.12.2016 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வின் முடிவுகளை மார்ச் 31ஆம் தேதிக்குள் முடித்துவிடுவதாக கார்ப்பரேட் அலுவலகம் உறுதி அளித்திருந்தது. ஆனால் அது நடைபெறவில்லை. எனவே மனிதவள இயக்குனர் இந்த பிரச்சனையில் தலையிட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நமது மத்திய சங்கம் கடிதம் எழுதியுள்ளது.

**2016 JAO தேர்வு விதிகளில் நமது மத்திய சங்கம் கோரியுள்ள மாற்றங்கள்:-** கார்ப்பரேட் அலுவலகம் வெளியிட்டுள்ள JAO தேர்வு விதிகளில் இலாகா ஊழியர்களுக்கான ஒதுக்கீடு 50%ல் இருந்து 25%ஆக குறைக்கப்பட்டிருந்தது. நமது மத்திய சங்கம் இதனை கடுமையாக எதிர்த்ததுடன் கீழ்கண்ட வேறு சில மாற்றங்களையும் கோரியுள்ளது.

அ) மாநிலங்களில் உள்ள காலிப்பணியிடங்களில் 40%த்தை BSNLல் பணிபுரியும் ஊழியர்களைக் கொண்டு LICE மூலமாக நிரப்பப்படவேண்டும்.

ஆ) மாநிலங்களில் உள்ள 10% காலிப்பணியிடங்களை ACCOUNTANT/JA/ LDCE (TA) ஆகிய கேடர்களில் பணியாற்றும் ஊழியர்களைக் கொண்டு LICE மூலமாக நிரப்பப் பட வேண்டும்.

இ) தேவையான தகுதியை உடைய 5 ஆண்டு சேவை முடித்தவர்கள் அனைவரையும் LICE தேர்வு எழுத அனுமதிக்கப்பட வேண்டும்.

ஈ) இந்த விதியினை JAO தேர்வு விதிகள் 2016 என்பதற்கு பதிலாக 2017 என இருக்க வேண்டும்.

**அனாமலி பிரச்சனையில் தீர்வு வேண்டி...:-** நீண்ட காலமாக தேங்கியுள்ள அனாமலி பிரச்சனைக்கு தீர்வு காண BSNL கார்ப்பரேட் அலுவலகம் தனது முன்மொழிவுக்கு ஒப்புதல் வழங்க வேண்டி DOTக்கு அனுப்பியுள்ளது. இது தொடர்பாக DOTயில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் BSNL ஊழியர் சங்கம் பலமுறை விவாதித்துள்ளது. ஆனால் தேவையான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை. இந்த சூழ்நிலையில் DOTயின் JOINT SECRETARY(Admn) திரு அமித் யாதவ் அவர்களின் தலையீட்டைக் கோரி நமது மத்திய சங்கம் கடிதம் எழுதியுள்ளது.

**விடுபட்ட கேடர்களின் பெயர் மாற்றம்:-** கேடர்களின் பெயர் மாற்றக் கமிட்டியின் கூட்டம் 24.04.2017 அன்று நடைபெற்றது. விடுபட்ட 12 Group.D கேடர்களுக்கு 'TELECOM ASSISTANT' என்ற பெயர் வழங்க வேண்டும் என நமது சங்கத்தின் சார்பாக பங்கேற்ற தோழர் P.அபிமன்யு GS, தோழர் பல்பீர் சிங் தலைவர் மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS ஆகியோர் கேட்டு

கொண்டனர். கடந்த கூட்டத்தில் நிர்வாகத்தின் சார்பாக வழங்கப்பட்ட கேடர்களின் பட்டியலில் உள்ள 19 கேடர்கள் தற்போது நடைமுறையில் இல்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே அந்த ஊழியர்களை தற்போதுள்ள முக்கியமான நான்கு கேடர்களான ATT,TT, JE or OS/SOAக்களாக மாற்றிட வேண்டும் என ஊழியர் தரப்பில் கோரப்பட்டது. இது தொடர்பாக பரிசீலிப்பதாக நிர்வாகம் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

**மத்திய செயற்குழு:-** அடுத்த மத்திய செயற்குழு ஜூன் 9 முதல் 11 வரை திருவனந்தபுரத்தில் நடைபெற உள்ளது. அங்கேயே 9ஆம் தேதி இரவு 7 மணிக்கு K.G.BOSE MEMORIAL TRUST கூட்டம் நடைபெறும்.

**தமிழ் நாட்டில் ஒப்ப்ந்த ஊழியர்களை வகைப்படுத்த விரைவில் விளக்கம்:-** கேரள மாநிலத்தில் செய்துள்ளதை போல தமிழகத்திலும் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களையும் (SEMI SKILLED/SKILLED) என வகைப்படுத்துவது தொடர்பாக தமிழ் மாநில நிர்வாகம் கார்ப்பரேட் அலுவலகத்திற்கு விளக்கம் கேட்டிருந்தது. 23.03.2017 அன்று தோழர் P.அபிமன்யுGS, தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS மற்றும் தோழர் M.K.தவே AGS ஆகியோர் GM(Restg) திரு அசுடொஷ் குப்தா அவர்களை சந்தித்து இது தொடர்பாக விவாதித்தனர். தேவையான வழிகாட்டுதலை தமிழக தலைமை பொது மேலாளர் அவர்களுக்கு விரைவில் அனுப்புவதாக அவர் ஏற்றுக் கொண்டார்.

**BSNL-MTNL இணைப்பு தொடர்பாக பிரதமருக்கு கடிதம்:-** பாராளுமன்ற மனுக்களின் மீதான கமிட்டி BSNL-MTNL இணைப்பினை பரிந்துரைத்து பாராளுமன்றத்திற்கு அறிக்கை அனுப்பியுள்ளதாக பத்திரிக்கை செய்திகள் வந்துள்ளன. BSNL-MTNL இணைப்பு தொடர்பான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கும் முன்னர் கீழ்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் என பாரத பிரதமருக்கு BSNL ஊழியர் சங்கம் கடிதம் எழுதியுள்ளது.

அ) பங்கு சந்தை பட்டியலிலிருந்து MTNL விலக்கப்பட வேண்டும்.

ஆ) MTNLன் கடனை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இ) MTNL பகுதிகளில் உள்ள வலைத்தளங்களை புதுப்பிக்க அரசாங்கம் BSNLக்கு நிதி உதவி செய்திட வேண்டும்.

ஈ) BSNL மற்றும் MTNL ஊழியர்களின் ஊதிய முறை ஒன்றாகவே இருக்க வேண்டும்.

**இடம் பெயரும் பறவைகள்:-** ஆறு மாத காலத்தில் 12 கோடி சந்தாதாரர்களை பிடித்ததாக ரிலையன்ஸ் ஜியோ பெருமை பேசியது. அதன் இலவச காலம் மார்ச் 31 உடன் முடியப் போவதாகவும், தன் சந்தாதாரர்களை மாதம் 99 ரூபாய் கட்டி 'JIO PRIME MEMBERSHIP OFFER'ல் இணைய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டது. ஆனால் இதுவரை 12 கோடி சந்தாதார்களில் வெறும் 1.6 கோடி சந்தாதாரர்கள் மட்டுமே அதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். அவ்வாறெனில் வெறும் 13% பேர் மட்டுமே அதன் உண்மையான வாடிக்கையாளர்கள், மற்றவர்கள் ரிலையன்ஸ் ஜியோவின் இலவசங்களுக்காக சென்ற இடம் பெயரும் பறவைகள் தான்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**